FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
~~குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்~~

C 8129872

1. District : **Thoothukudi** PS: **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: **2025** FIR No: **03/2025** Date: **05.05.2025**
மாவட்டம் காவல் நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: **Prevention of Corruption Act, 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7 (b)**
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : **28.04.2025 at about 12.30 hrs 30.04.2025 at about 17.30 hrs and 03.05.2025 at about 14.40 hrs**
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **05.05.2025** நேரம் **10.00 hrs**
(c) General Diary Reference : Entry No(s) **05.05.2025** Time : **10.30 hrs**
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : **கணினி தட்டச்சு மூலமாக**
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: **About 15 Kms North VAO Office, Sankaraperi village Thoothukudi Taluk**
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : **திரு.பா.பிரபாகர்** (b) Father's/ Husband's Name : **பால்**
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) National **இந்தியன்** (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : **3/225, மேலத்தெரு, பண்டாரம்பட்டி, சங்கரப்பேரி, தூத்துக்குடி.**
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கணேசமூர்த்தி, கிராம நிர்வாக அலுவலர், சங்கரப்பேரி கிராமம், தூத்துக்குடி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: **No**
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha Inspector of Police Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

J. Anitha
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 05.05.2025 at 11.30 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் J. ANITHA
Rank: நிலை Inspector of Police

Inspector of Police
Vigilance And Anti-Corruption
Thoothukudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.03/2025

பணிந்து அனுப்பப்படுகிறது.

இன்று 05.05.2025-ம் தேதி காலை 10.00 மணிக்கு J.அனிதா, காவல் ஆய்வாளர், தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆகிய நான் நிலையத்தில் அலுவலில் இருந்தபோது தூத்துக்குடி தாலுகா, சங்கரப்பேரி, பண்டாரம்பட்டி, மேலத்தெரு, கதவு எண்.3/225, என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு.பா.பிரபாகர் என்பவர் நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனு கொடுத்தார். அந்த புகார் மனுவில் அவரது மனைவி பெயரில் சங்கரப்பேரி கிராமம் சர்வே எண் 459/2யு1-ல் அமைந்துள்ள 4.586 சென்ட் அளவுள்ள பிளாட் எண்.10 இடம் உள்ளது என்றும், அவரது மனைவி 28.01.2025-ம் தேதி உடல்நிலை சரியில்லாமல் இறந்து விட்டார் என்றும், எனவே அவரது வாரிசுதாரர்களான நான் (பா.பிரபாகர்) மற்றும் எனது மகன்கள் நவீன்குமார் மற்றும் பெவின்குமார் ஆகியோர் பெயர்களை பட்டாவில் சேர்க்க கேட்டு இ-சேவை மையம் மூலம் 05.04.2025 அன்று மனு சமர்ப்பித்ததாகவும், அது சங்கரப்பேரி கிராம நிர்வாக அலுவலரால் நிராகரிக்கப்பட்டதாகவும், பின்னர் 19.04.2025 அன்று மீண்டும் விண்ணப்பித்ததாகவும் அதன் பேரில் பட்டா எண்.3547-ல் தங்களது பெயர் சேர்க்கப்பட்டதாகவும், மேற்படி பட்டாவில் எங்களது பெயரை சேர்க்க பரிந்துரை செய்ததற்காக சங்கரப்பேரி கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி ரூ.3,000/- லஞ்சம் கேட்பதாகவும், எனவே தன்னிடம் லஞ்சம் கேட்கும் சங்கரப்பேரி கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்திருந்தார். நான் அந்த புகார் மனுவை பெற்று அது குறித்து இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சங்கரப்பேரி கிராம நிர்வாக அலுவலர் திரு.கணேசமூர்த்தி பற்றியும் இரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தையை அறிந்தும், புகார் மனு மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அதனை கனம் காவல் கண்காணிப்பாளர், தென்சரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகம், சென்னை அவர்களிடம் தொலைபேசியில் தெரிவித்து அனுமதி பெற்றும் புகார் மனுவின் தன்மைக்கேற்ப தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை குற்ற எண் 03/2025

பிரிவு 7(b) of PC Act, 1988 as Amended in 2018-படி 05.05.2025-ம் தேதி காலை 10.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : பா.பிரபாகர்,வயது45, த/பெ.பால், 3/225,மேலத்தெரு, பண்டாரம்பட்டி, சங்கரப்பேரி, தூத்துக்குடி. செல் : 9655517857 பெறுநர் : காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, தூத்துக்குடி. அய்யா / அம்மா, நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டி தொழில் செய்து வருகிறேன். கடந்த 20.12.2021ம் தேதியன்று சங்கரப்பேரி கிராமம் சர்வே எண் 459/2-ல் அமைந்துள்ள 4.586 சென்ட் அளவுள்ள Plot No.10-யை தூத்துக்குடி Joint-I பத்திர அலுவலக Doc.No.4938/2021-ன் படி 1) கலாராணி, 2) அபிஷேக், 3)மாரியம்மாள் ஆகியோரிடமிருந்து ரூ.1,60,000/-ற்கு என் மனைவி தமிழ்செல்வி பெயரில் கிரையத்திற்கு வாங்கினேன். பத்திரம் முடித்தவுடன் தானாகவே பட்டாவில் பெயர் ஏறிவிடும் என்று சொன்னார்கள். ஆனால் அப்படி ஏதும் ஏறவில்லை. அதன் பின்னர் விசாரித்த போது பட்டாவில் பெயர் சேர்க்க கேட்டு இ-சேவை மையம் மூலம் விண்ணப்பிக்க சொன்னார்கள். நானும் அதன்படி என் மனைவி பெயரை மேற்படி இடத்திற்கான பட்டாவில் சேர்க்க கேட்டு இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்தேன். ஆனால் அந்த மனுவினை நிராகரித்துவிட்டார்கள். என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்நிலையில் என் மனைவி தமிழ்செல்வி கடந்த 28.01.2025ம் தேதியன்று உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார். அதன் பின்னர் நான் என் மனைவிக்குரிய இறப்பு சான்றிதழ், வாரிசு சான்றிதழ் எல்லாம் வாங்கிவிட்டு, மேற்படி என் மனைவி பெயரில் வாங்கிய இடத்திற்கான பட்டாவில் என் மனைவிக்கு வாரிசுதாரர்களான எனது பெயரினையும், என் மகன்கள் நவீன்குமார், பெவின்குமார் ஆகியோர் பெயர்களையும் சேர்க்க கேட்டு கடந்த 05.04.2025ம் தேதி இ-சேவை மையம் மூலம் விண்ணப்பத்திருந்தேன். மூலப்பத்திரம் சமர்ப்பிக்கவில்லை என்று கூறி அந்த மனுவினையும் நிராகரித்து விட்டார்கள். அதன் பின்னர் தற்போது 19.04.2025ம் தேதியன்று மீண்டும் பட்டாவில் பெயர் சேர்க்க கேட்டு பட்டா மாறுதல் மனு எண் 2025/0103/28/533725-ன் படி இ-சேவை மையம் மூலம் விண்ணப்பித்தேன். அதன் பின்னர் 28.04.2025ம் தேதியன்று மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் சங்கரப்பேரி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.கணேசமூர்த்தியை சந்தித்து எனது மனு சம்பந்தமாக

விசாரித்தேன். அப்போது அவர் என்னிடம் அவருக்கு லஞ்சமாக ரூ.3,000/- கொடுத்தால் பட்டாவில் பெயர் சேர்க்க பரிந்துரைத்து அனுப்பி வைப்பதாக கூறினார். நான் உடனே அவரிடம் சார் நான் ரொம்ப கஷ்டப்படுகிறேன் என்னால் அவ்வளவு பணம் எல்லாம் கொடுக்க முடியாது என்று கூறினேன். உடனே அவர் எனது செல்போன் எண்ணை மட்டும் வாங்கி வைத்துவிட்டு சரி நான் கூப்பிடுகிறேன் நீங்கள் போங்கள் என்று சொல்லி என்னை அனுப்ப வைத்து விட்டார். நானும் சரி என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதன் பின்னர் கடந்த 30.04.2025ம் தேதி மாலை சுமார் 04.40 மணியளவில் சங்கரப்பேரி VAO திரு.கணேசமூர்த்தி அவர்கள் அவரது செல்போன் எண் 8056327457ல் இருந்து எனது செல்போன் எண் 9655517857-ற்கு போன் செய்தார். அப்போது நான் வேறு ஒருவரிடம் போனில் பேசிக் கொண்டிருந்ததால் எடுக்க முடியவில்லை. பின்னர் பேசி முடித்த பின்பு நான் அவருக்கு போன் செய்தேன். அப்போது அவர் என்னிடம் என்னுடைய இடம் சம்பந்தமான அசல் ஆவணங்களை கொண்டு வந்து காமித்துவிட்டு செல்லுமாறு கூறினார். நானும் அதன் பேரில் நான் 30.04.2025ம் தேதியன்று மாலை சுமார் 05.30 மணியளவில் சங்கரப்பேரி VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த VAO திரு.கணேசமூர்த்தி அவர்களிடம் என்னுடைய இடம் சம்பந்தமான அசல் ஆவணங்களை எல்லாம் காண்பித்தேன். அவரும் அதனை வாங்கி பார்த்துவிட்டு, சரி நான் கேட்ட பணம் ரூ.3,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் சார் கையில் இருந்த காசு எல்லாம் ஆட்டோவிற்கு செலவாகி விட்டது. இப்போது என்னிடம் காசு ஏதும் இல்லை என்று கூறினேன். உடனே அவர் சரி நான் உங்கள் மனுவை இப்போது பரிந்துரைத்து அனுப்பி வைத்து விடுகிறேன். ஆனால் கண்டிப்பாக நான் கேட்ட ரூ.3,000/-யை பின்னர் கொண்டு வந்து கொடுத்து விட வேண்டும் என்று கூறினார். நானும் அவரிடம் வேறு வழியில்லாமல் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். நான் அங்கிருந்து வந்த சிறிது நேரத்திலேயே என்னுடைய மனு மண்டல துணை வட்டாட்சியருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக எனது செல்போனிற்கு மெசேஜ் வந்தது. அதன் பின்னர் 03.05.2025ம் தேதி காலை சுமார் 07.25 மணியளவில் எனது மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு பட்டா எண் 3547 வழங்கப்பட்டுள்ளதாக எனது செல்போனிற்கு மெசேஜ் வந்தது. நான் அதன் பின்னர் 03.05.2025ம் தேதி மதியம் சுமார் 01.45 மணியளவில் கம்ப்யூட்டர் சென்டர் சென்று பார்த்த போது மேற்படி என்னுடைய இடத்திற்கான பட்டா எண் 3547-ல் என் பெயரும், என் மகன்கள்

நவீன்குமார், பெவின்குமார் பெயர்களும் ஏற்றப்பட்டிருந்தது. அதன் பின்னர் நான் 03.05.2025ம் தேதி மதியம் சுமார் 02.40 மணியளவில் VAO திரு.கணேசமூர்த்திக்கு போன் செய்து சார் பட்டாவில் பெயர் ஏறிவிட்டது ரொம்ப நன்றி சார் என்று சொன்னேன். அதற்கு அவர் சரி நான் கேட்டபணம் ரூ.3,000/- என்ன ஆச்சு என்று கேட்டார். நான் அவரிடம் சார் ஒரு நடைக்காக வெளியூர் வந்திருக்கிறேன், திங்கள் கிழமை கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன் ரூபாயை கொஞ்சம் குறைத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் ரூபாயை எல்லாம் குறைக்க முடியாது திங்கள் கிழமை கொண்டு வந்து கொடுங்கள் என்று கூறிவிட்டார். நானும் சரி என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டேன். அதன் பின்னர் நான் யோசித்து பார்த்தபோது நமது கஷ்டத்தை சொல்லியும் ஒரு அரசு அதிகாரி அவரது கடமையை செய்ததற்கு இப்படி லஞ்சம் கேட்கிறாரே என்று எனக்கு மன உளைச்சலாக இருந்தது. எனவே அவர் மீது லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுத்து விடலாம் என்று முடிவு செய்தேன். என்னிடம் ரூ.3000/- லஞ்சம் கேட்கும் சங்கரப்பேரி VAO திரு.கணேசமூர்த்தி மீது தக்க நடவடிக்கை எடுக்க கேட்டு இந்த புகார் மனுவினை கொடுக்கிறேன். இப்படிக்கு xxxxxx s/d., by P.பிரபாகர் 5-5-2025. இணைப்பு : 1) ஒப்புகைச்சீட்டு - பட்டா மாறுதல் மனு எண் 2025/0103/28/533725-ன் நகல். 2) Doc.No.4938/2021-ன் நகல். 3) திருமதி.தமிழ்செல்வி, க/பெ.பிரபாகர் இறப்பு சான்றிதழ் நகல். 4) திருமதி.தமிழ்செல்வி, க/பெ.பிரபாகர் வாரிசு சான்றிதழ் நகல். 5) பட்டாஎண் 3547-ன் நகல். Sir, Received by me on 05.05.2025 at 10.00 hrs & verified the antecedents of both the complainant and the accused, and after getting the oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and I registered a case in Thoothukudi V&AC Cr.No.03/2025 u/s 7(b) of Prevention of Corruption Act 1988 as Amended in 2018 at 10.30 hrs. xxxxxx s/d., by J.ANITHA 05.05.2025, Inspector of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, வாதியின் அசல் புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த இணைப்புகள் ஆகியவற்றை இணைத்து கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை எனது விசாரணைக்கும் எடுத்துக் கொண்டேன்.

J. Anitha
5/5/25.
Inspector of Police,
V&AC, Thoothukudi.